# பாரதிதாசன் பல்கலை.யில் விரைவில் சூரியசக்தி பூங்கா

## துணைவேந்தர் தகவல்

திருச்சி, ஜன. 23-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் 1 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் சூரியசக்தி பூங்கா விரைவில் அமைக்கப்படும் என துணைவேந்தர் முத்துக்குமார் கூறினார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்தில் உள்ள தொழில்நுட்ப பூங்கா வளாகத்தில் 100 கி.வோ. திறனுடைய சூரிய மின்சக்தி உற்பத்தித் திட்ட தொடக்கவிழா நடந்தது. இதில் துணைவேந்தர் முத்துக்குமார் பேசியதாவது:

இன்றைய சூழலில் மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாது. அணு சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், அதனால் ஏற்படும் பாதிப்பையும் நாம் கண் கூடாகக் காணமுடிகிறது. சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் மரபுசாரா எரிசக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகள் வலியுறுத்தி அதற்கான பசுமைத்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

பாரதிதாசன் பல்கலைக்கழக மைய வளாகத்தை பசுமை வளாகமாக்கும் வகையில், தண்ணீரை அதிகம் உறிஞ்சக்கூடிய தேக்கு, கருவேல மரங்கள் வெட்டப்பட்டு, பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வரும் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் நீராதாரம் உயர்வதுடன், வளாகமும் பசுமையாகும்.

தற்போது காஜாமலை வளாகத்தில் தொழில்முனைவோர் சுயவேலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தொழில்நுட்பப் பூங்கா வளாகத்தில் தலா 50 கிலோவாட் வீதம் மின்சாரத்தை உற்பத்திச் செய்யக்கூடிய சூரிய மின்சக்தி சாதனங்கள் ரூ.1.05 கோடியில் பொருத்தப்பட்டுள்ளன. இது இந்த வளாகத்தின் மின்தேவையை ஈடுகட்டும்.

பல்கலைக்கழக மைய வளாகத்தில் (பல்கலை பேரூர்)7 ஏக்கர் பரப்பளவில் ஒரு மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திச்செய்யக்கூடிய வகையில் சூரியசக்தி பூங்கா அமைக்கப்படும். இந்த பூங்கா ஆய்வு மாணவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையிலும் அமையும். இவ்வாறு அவர் கூறினார்.

பெங்களூர் பெல் நிறுவனத்தின் உதவிப் பொது மேலாளர் மஞ்சுநாத், முதுநிலைப் பொறியாளர் விபின்தாஸ் ஆகியோர் திட்ட விளக்கவுரையாற்றினர். பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் செல்வநாயகம், குமாரசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

முன்னதாக, தொழில்முனைவோர் சுயவேலை மேம்பாட்டு நிறுவன இயக்குநர் பார்த்தசாரதி வரவேற்றார். தொழில்நுட்பப்பூங்கா இயக்குநர் கோபிநாத் கணபதி நன்றி கூறினார்.